வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : CC 42 of 2019

வழக்கு சாட்சி - PW7

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. இளங்கோவன் | தொழில் | : | |
| தந்தை பெயர் | : | காளிமுத்து | வயது | : | |
| கிராமம் | : | | | | |
| தாலுக்கா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 16.09.2025.

(எதிரி ஆஜர் இல்லை).

**முதல் விசாரணை :** **நாள் : 16.09.2025.**

1) நான் தற்போது திருப்பூர் மாவட்ட குழந்தைகள் கடத்தல் மற்றும் தடுப்பு பிரிவு உதவி ஆய்வாளரகாக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 27.09.2017 ஆம் தேதி பல்லடம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக நிலைய பொறுப்பு அலுவலில் இருந்தபோது பல்லடம் அரசு மருத்துவமனை சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த செல்வராஜ் மனைவி சங்கீதா என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்று வந்து பல்லடம் காவல் நிலைய குற்ற எண் 964/2018 சட்டப்பிரிவுகள் 294(b),323,506(ii) இதச வழக்கில் முதல் தகவல்அறிக்கை பதிவு செய்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.த.சா.ஆ.** 4 ஆகும். அசல்முதல் தகவல் அறிக்கையுடன் வாதியின் புகார் வாக்குமூலத்தையும் இனைத்து நீதிமன்ற பொறுப்பில் ஒப்படைத்தேன்.புலன் விசாரணைக்காக வழக்கு கோப்பை காவல் உதவி ஆய்வாளர் திரு. கார்த்திகேயன் பார்வைக்கு வைத்தேன். இது சம்மந்தமாக காவல் உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :**

1) முதல் தகவல்அறிக்கை 8 மணி நேரம் காலதாமதமாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால்சரிதான். அவ்வாறு காலதாமத்திற்கு வேலை பலுவே காரணம் என்றால் சரிதான். குமரன் கார்டன் சைட் நம்பர் 6470 வேலுசாமிக்கு பாத்தியப்பட்டது என்று முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால்சரிதான். அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்தார்களா என்றால் இல்லை புலன் விசாரணை அதிகாரியிடம்தான் கேட்க வேண்டும். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த அன்றே 28.09.2018 அன்று வேலுசாமி என்பவர் சங்கீதா, செல்வராஜ், சிவக்குமார் என்பவர் பெயரில் புகார் பதிவு செய்யப்பட்டுள்ளது குற்ற எண் 965/2018 ஆகும் புகார் பதிவு செய்துள்ளார் என்றால் சரிதான். நான் சரிவர விசாரிக்காமல் வாக்குமூலம் பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

2) சொன்ன நேரம் சொன்ன விதத்தில் புகார் எதுவும் பதிவு செய்யபடவில்லை என்றால் சரியல்ல. புகார் தாக்கல் செய்யும்போது சங்கீதா என்பவர் என்னிடம் சைட் நம்பர் 6470 என்பதற்கான வில்லங்க சான்று ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். புகார் சொன்ன நேரம் சொன்ன விதத்தில் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. புகாரில் எந்த ஒரு வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.சங்கீதாவிற்கு எழுத படிக்க தெரியாது என்றால் சரியல்ல. புகாரில் சங்கீதா கையொப்பம் செய்யவில்லை என்றால் சரியல்ல.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

S SAPNA
Digitally signed by S SAPNA
Date: 2025.09.16 18:23:26 +0500

நீதித்துறை நடுவர்,

பல்லடம்.